# 2.0 செயல் முன்னேற்ற அறிக்கை 2020- நிகழ்ச்சித் திட்டங்கள் 2021

பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் கால்நடை வளர்ப்பு மற்றும்
சிறு பொருளாதார பயிர்ச்செய்கை இராஜாங்க அமைச்சு
6 மற்றும் 7 ஆம் மாடிகள், தபால் தலைமையகக் கட்டிடம்
310, டீ.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10

# 2.0 செயல்முன்னேற்ற அறிக்கை 2020 - நிகழ்ச்சித்திட்டங்கள் 2021


| விடயம் | பக்கம் |
|---|---|
| கௌரவ அமைச்சரின் செய்தி | i |
| முகவுரை | ii |
| 2.1 அறிமுகம் | 16 |
| 2.2 இராஜாங்க அமைச்சின் ஒழுங்கமைப்பு மற்றும் செயற்பணி | |
| 2.2.1 தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகள் | 17 |
| 2.2.2 அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகள் | 20 |
| 2.2.3 நிதி நடவடிக்கைகள் | 21 |
| 2.2.4 உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் | 22 |
| 2.3 இராஜாங்க அமைச்சின் கீழான எதிர்கால அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 23 |
| 2.4 தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அதிகாரசபை (இலங்கை ஹதபிம அதிகாரசபை) | 25 |
| 2.5 அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு | 30 |

# இராஜாங்க அமைச்சரின் செய்தி



சிக்கல் நிறைந்த தற்கால பொருளாதாரப் பின்னணியில், விவசாய அமைச்சினால் முன்னெடுக்கப்படும் சேவையை பாராட்டுவதுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களை முதன்மைப்படுத்தி இந்த நாட்டின் பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்திக்காக நியமிக்கப்பட்ட பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் இந்த அறிக்கையை மிகுந்த மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

2020 ஆம் ஆண்டில் வீட்டு மிருக வளர்ப்பு பிரிவின் அபிவிருத்திக்காக தேசிய, மாகாண, கிராமிய மட்டத்திலான ஏராளமான நிகழ்ச்சித் திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட உள்ளன. இதனூடக தேசிய உற்பத்தி அபிவிருத்தி மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதும், மக்களின் போஷனை மட்டத்தினை மேம்படுத்துவதற்கும் மக்களின் ஜீவன உபாய முறைகளை முன்னேற்றுவதற்கும் எதிர்ப்பார்க்கப்படுகிறது. இலங்கையின் விஷேடமான புவியியற் தன்மைக் கேற்ப பயிர்ச் செய்யக் கூடிய மஞ்சல், உளுந்து, இஞ்சி போன்ற பொருளாதாரப் போட்டிக்கு பொருத்தமான பயிர்ச்செய்கைகளை நவீன தொழிநுட்பத்தை உபயோகித்து விளைச்சலையும் இலாபத்தையும் மேம்படுத்தி இறக்குமதிக்காக வெளிநாட்டுக்கு செல்லும் பணத்தையும் மீதப்படுத்திக் கொள்ள எதிர்ப் பார்க்கப்படுகிறது.

அவ்வாறே, வறுமை ஒழிப்புக்கான வெளிநாட்டு திட்டங்கள் ஜனாதிபதி செயலணி திட்டங்கள் என்பவற்றுடன் இணைத்து பின்தங்கிய பிரதேசங்களில் அடிப்படை வசதிகளை முன்னேற்றவும் நடவடிக்கை எடுக்க எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அதிமேதகு ஜனாதிபதியின் நாட்டை உருவாக்கும் ‘‘சுபீட்ஷத்தின் நோக்கு’’ கொள்கை பிரகடனத்தின் இலக்கை அடைவதனை நோக்கமாக கொண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியின் முழுப்பயனையும் மக்களுக்கு பெற்றுக்கொடுக்க கடந்த வருடத்தை விட இனிவரும் வருடங்களில் எம்மால் முடிந்த வரை உழைப்பதே எமது நோக்கமாகும்

நான் இராஜாங்க அமைச்சராக சத்தியபிரமாணம் செய்ததிலிருந்து எனக்கு ஆலோசனைகளும் வழிக்காட்டலும் வழங்கி வடக்கு கிழக்கு மாகாணம் உட்பட முழு நாட்டினதும் விவசாய அபிவிருத்திக்காக எனக்கு அளித்து வரும் உதவிக்காக மதிப்பிற்குறிய விவசாய அமைச்சர் திரு. மகிந்தானந்த அளுத்கமகே அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகளை இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். மேலும் விவசாய அமைச்சின் செயலகத்திற்காக பாடுபடும் மதிப்பிற்குரிய இராஜாங்க அமைச்சர்கள், செயளர்கள் உட்பட அனைத்து நிர்வாக அமைப்பினருக்கும், அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் ஏனைய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை கூறிக்கொள்கின்றேன்.

கௌரவ சதாசிவம் வியாழேந்திரன்
பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் கால்நடை வளர்ப்பு
மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை இராஜாங்க அமைச்சர்

# முகவுரை

புல தசாப்த காலமாக இலங்கையின் கிராமிய அபிவிருத்திக்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும், இதுவரை அபிவிருத்தியில் அடையாதுள்ள பின்னடைவான கிராமப் பிரதேசங்களை இனங்கண்டு அதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி அப்பிரதேச மக்களுக்கும் தற்போது காணப்படுகின்ற சமூக முரண்பாடுகளிலிருந்து விடுபட்டு உயர் வாழ்க்கைத் தரத்தை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கத்துடன் பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சின் விசேட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளதுடன், விவசாயத்துறை தொடர்பில் சிறு பொருளாதார பயிர்செய்கைகளை வீடுகளை மையமாகக் கொண்டு மேம்படுத்துவதற்காக அதனுடன் சம்பந்தப்பட்ட அரசின் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடன் இணைந்து தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கு அமைய பயிர்செய்கைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு கால்நடைவளர்ப்புத் துறையிலும் வர்த்தக நோக்கத்துக்கு புறம்பாக வீட்டு கால்நடைவளர்ப்பை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், அதனூடாக கிராமிய மக்களின் போசாக்கு நிலைமையை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்புக்கான சானதிபதி செயலணியுடன் இணைந்து பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக அபிவிருத்தி பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து முன்னேற்றத்தின் உதயத்தை அவர்களுக்கும் பெற்றுக் கொடுக்கத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் இந்த அமைச்சு திட்டங்களைத் தயார் செய்து வருகின்றது. நாட்டைக் கட்டியெழுப்பும் முழுமையான 2020 - 2025 சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்வதற்காக இந்த அமைச்சின் எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளதுடன், பூகோள புத்தாயிரமாம் ஆண்டின் அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் இதன் மூலம் பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

இதற்காக பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை இராஜாங்க அமைச்சுக்கு தலைமை, அறிவுரை மற்றும் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுக்கின்ற கௌரவ இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் அவர்களுக்கும், கமத்தொழில் நேர்வரிசை அமைச்சின் கௌரவ அமைச்சருக்கும் கமத்தொழில் நேர்வரிசை அமைச்சின் கீழுள்ள இராஜாங்க அமைச்சுக்களின் கௌரவ அமைச்சர்கள் மற்றும் செயலாளர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த பதவியணியினருக்கும், புதிதாக ஏற்படுத்தப்பட்டதொரு அமைச்சு என்ற வகையில் அதன் விசேடமான முன்னுரிமைகளுக்கு அமைய குறுகிய காலப்பகுதிக்குள் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்து இலக்குகளை அடைந்துகொள்வதற்கான திட்டங்களைத் தயார் செய்துள்ள இராஜாங்க அமைச்சின் பதவியணியினர் உள்ளிட்ட சகலருக்கும் அவர்களின் அர்ப்பணிப்புக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏ.சேனாநாயக்க,
இராஜாங்க செயலாளர்,
பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை இராஜாங்க அமைச்சு

# பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை இராஜாங்க அமைச்சு

## 2.1 அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2196/27 ஆம் இலக்க 2020.10.06 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டள்ளது. அதன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த அமைச்சின் கீழுள்ள பணிகள் மற்றும் செயற்பாடுள் பின்வருமாறாகும்.

### ➢ பணிகள் மற்றும் செயற்பாடுள்

(1) கமத்தொழில் அமைச்சரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் "புதிய தொழில்நுட்பக் கைத்தொழில்" இனை ஆரம்பிப்பதற்கான சட்டங்கள் மற்றும் சட்டவிதிகளுக்கு இசைவாக பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை விடயப்பரப்பு தொடர்பிலான கொள்கைகளை வகுப்பதற்கு உதவுதல், தேசிய வரவு செலவுத்திட்டம், அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் காணப்படுகின்ற கருத்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நியாயாதிக்க நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை அமுல்படுத்தல், பின்னாய்வு மற்றும் மதிப்பீடு செய்தல்.

### ➢ விசேட முன்னுரிமைகள்

(1) விசேட பூகோள பண்களைக் கொண்டுள்ள பிரதேசங்களில் பயிரிடக்கூடிய மஞ்சல், உளுந்து, இஞ்சி, உள்நாட்டு கிழங்கு வகைகள் போன்ற சிறு பயிர்செய்கைகளை வீடுகளை அண்மித்த காணிகளில் பயிர் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

(2) வீடுகளில் ஆடு, கோழிகளை வளர்ப்பதற்காக கால்நடைவள அபிவிருத்திக் கருத்திட்டச் சேவைகளை முறையாகப் பெற்றுக் கொடுத்தல்.

(3) நிதி நிறுவனங்கள், தொழில்நுட்பச் சேவை நிறுவனங்கள், அடிப்படை உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்களை வழங்குவோரை இனங்கண்டு அதன் மூலம் சிறு பயிர்செய்கை சந்பந்தமான வீட்டு உற்பத்திகளை விஸ்தரிப்பதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதை ஒருங்கிணைப்புச் செய்தல்.

(4) உரிய நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பின்தங்கிய கிராமங்களில் வாழ்வாதார வழிமுறைகள் மற்றும் அடிப்படைத் தேவைகளை வலுவூட்டுவதற்கான நுன் நிதி வசதிகள் உள்ளடங்களாக புத்தெழுச்சிக்கான நிதி வசதிகள் முறையியலை அறிமுகம் செய்தல்.

(5) பயங்கரவாத செயற்பாடுகளுக்கு ஆளான கிராமப்புற பிரதேசங்களின் வீதிகள், நீர்ப்பாசனம், குடிநீர் வசதிகள், மின்சாரம், மருந்தகங்கள், ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்காக வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார புத்தெழுச்சிக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள சனாதிபதி செயலணியுடன் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## ➢ உரிய நிறுவனங்கள் மற்றும் சட்டரீதியான சட்டகம்

| திணைக்களங்கள், நியாயாதிக்க நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் | அமுல்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும், சட்டவிதிகளும் |
|---|---|
| 1. தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அதிகாரசபை | • ஆரச கமத்தொழில் கூட்டிணைத்தல் கூட்டுத்தாபனச் சடடம் (1972 இன் 11 ஆம் இலக்கம்) |

## 2.2 இராஜாங்க அமைச்சின் ஒழுங்கமைப்பும் செயற் பணியும்

- தாபனப் பிரிவு, அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு, கணக்குகள் பிரிவு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஆகிய பிரதான நான்கு பிரிவுகளைக் கொண்டதாக இராஜாங்க அமைச்சின் ஒழுங்கமைப்பும், செயற்பணியும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.
- தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அதிகாரசபை என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற இலங்கை ஹதபிம அதிகாரசபையானது, இந்த அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற அரச நிறுவனமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

### 2.2.1 தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகள்

#### 2.2.1.1 பதவியணியின் தாபன நடவடிக்கைகள்

இப்பிரிவினால் 2020.07.31 ஆம் திகதி வரை நிறைவேற்றப்பட்ட பிரதான செயற்பணி பொழிப்புரையாகக் கீழே தரப்பட்டுள்ளது.

(1) அமைச்சின் பதவியணி சம்பந்தமான தாபன நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.
(2) அமைச்சின் நிருவாக நடவடிக்கைகளை வழிப்படுத்தல்
(3) பாராளுமன்றத்தின் தேவைகள் தொடர்பிலான நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

#### 2.2.1.2 அலுவலர்களை நியமனம் செய்தல், பதவி உயர்வு வழங்குதல் மற்றும் பதவிக்கு நிரந்தர நியனம் செய்தல்.

| பதவிப் பெயர் /சேவை | புதிய பதவிகளை ஏற்படுத்துவதற்கான கோரிக்கை ஐ | பதவிகளை ஏற்படுத்துவதற்கான அங்கீகாரம் | புதிய நியமனம் | இடமாற்றம் பெற்றுச் சென்றது | ஓய்வு பெறல் | சேவை முடிவுறுத்தல் | ஆட்சேர்ப்பு | இடமாற்றம் பெற்று வந்தது | வேறு (பதவி விலகல்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேலதிக செயலாளர் | - | - | - | 01 | - | - | - | 01 | - |
| பிரதம கணக்காளர் | - | - | - | - | 01 | - | - | 01 | - |
| பணிப்பாளர் | - | - | - | 01 | - | - | - | - | - |
| உதவிச் செயலாளர் | - | - | - | - | - | - | - | 01 | - |
| உதவிப் பணிப்பாளர் | - | - | - | - | - | - | - | 01 | - |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தகவல் தொழில்நுட்ப அலுவலர் | - | - | 01 | - | - | - | - | - | - |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | - | - | 01 | 01 | - | - | - | - | - |
| அபிவிருத்தி அலுவலர் /இணை அலுவலர் | - | - | 03 | 01 | - | - | - | - | - |
| முகாமைத்துவ சேவை அலுவலர் | - | - | - | 02 | - | - | - | 03 | - |
| சாரதி சேவை | - | - | - | 03 | - | - | - | 02 | - |
| அலுவலக சிற்றூழியர் சேவை | - | - | - | 06 | - | - | - | 05 | - |

**2.2.1.3 மேலதிக நேரம், பிரயாணச் செலவினம், சேவை மற்றும் வசதிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள உறுதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை**

| புணி | செலவுத் தல்லப்பு | உறுதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **சேவைகள் மற்றும் வசதிகள்** | | |
| **வாகனம்** | | |
| பராமரிப்பு | 1301 | 79 |
| எரிபொருள் வழங்கல் | 1202 | 148 |
| **சேவைகள்** | | |
| நீர் மற்றும் மின்சாரப் பட்டியல் | 1403 | 09 |
| துப்பரவேற்பாடு | 1405 | 06 |
| பாதுகாப்பு | | 06 |
| ஊபசரணை | 1203 | 02 |
| உபகரணம் பராமரிப்பு | 1302 | 11 |
| தொலைபேசிக் கட்டணம் | | 255 |
| பத்திரிகைக் கட்டணம் | | 34 |
| குடிநீர் போத்தல் வழங்கல் | | 06 |
| **மேலதிக நேரம்/ பிரயாணச் செலவினம் மற்றும் வேறு கொடுப்பனவுகள்** | | |
| மேலதிக நேரம் | 1002 | 88 |
| பிரயாணச் செலவினம் | | **45** |

### 2.2.1.4 வேறு தாபன நடவடிக்கைகள்

- இலவச புகையிரத உறுதிச்சீட்டுக்களை வழங்குதல் - 11
    - i. பட்டியல்களைத் தீர்த்தல் - 03
    - ii. புகையிரத சேவை விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் - 03
- கடன் வழங்குதல்
    - i. இடர் கடன் வழங்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை - 30
- சலுகை மோட்டார் வாகன உரிமப்பத்திரம் வழங்குதல் - 04
- மொழிபெயர்ப்புக்காக செலுத்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை - 06
- கௌரவ அமைச்சருக்கு எரிபொருள் விநியோகம், புகைப் பரிசோதனை மேற்கொள்ளல், சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல், மேலதிக எரிபொருள் பெற்றுக் கொள்ளல், சில்லறைக் காசு முற்பணம் மற்றும் வேறு பணிகளுக்காக சமர்ப்பிக்கப்பட் டுள்ள உறுதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை - 47
- பதவிநிலை அலுவலர்களின் 1/20 கொடுப்பனவைச் செலுத்தல் - 09
- உத்தியோகபூர்வ அடையாள அட்டை விநியோகம் - 22
- இலவச புகையிரத பருவச்சிட்டுக்களுக்கான விண்ணப்பங்களைத் தயார் செய்து திணைக்களத்திற்கு அனுப்புதல் - 06
- இடமாற்றம் பெற்றுள்ள அலுவலர்களின் லீவு அறிக்கைகளைத் தயார் செய்தல் - 12
- அரச சேவை சேமலாப நிதியத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் - 18
- அரச சேவை சேமலாப நிதியத்தின் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் - 15
- அக்ரஹார காப்புறுதி நட்ட ஈட்டுக்கு விண்ணப்பித்தல் - 10

### 2.2.1.5 அமைச்சின் உள்நாட்டு வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள்

| பயிற்சி வகை | பதவி நிலை அலுவலர் | | அபிவிருத்தி அலுவலர் | | முகாமைத்துவ உதவியாளர் | | சாரதி | | அலுவலக சிற்றூழியர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலுவலர் எண்ணிக்கை | பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | அலுவலர் எண்ணிக்கை | பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | அலுவலர் எண்ணிக்கை | பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | சாரதிகள் எண்ணிக்கை | பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை |
| உள்நாட்டுப் பயிற்சி | - | - | 03 | 02 | 03 | 02 | 02 | 01 | 04 | 01 |
| வெளிநாட்டுப் பயிற்சி, மாநாடுகளில் பங்கேற்றல் | - | - | - | - | - | - | - | - | - | - |

## 2.2.2 அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகள்

பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை இராஜாங்க அமைச்சின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவின் செயற்பணி பின்வருமாறாகும்.

- **பிரதான பணிகள்**

  - திறைசேரியினால் ஒதுக்கப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு அமைய இராஜாங்க அமைச்சின் செயற்றிட்டத்தைத் தயார் செய்தல்.
  - செயற்றிட்டத்தை அமுல்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.
  - மாதாந்த மற்றும் காலாண்டு அடிப்படையில் செயற்றிட்டத்திற்கு அமைய அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளைத் தயார் செய்தல்.
  - வருடாந்த வரவு செலவுத்திட்டம், செயலாற்றுகை அறிக்கைகளை உரிய காலப்பகுதிக்குள் தயார் செய்தல் மற்றும் உரிய பிரிவுகளிடம் சமர்ப்பித்தல்.
  - அமைச்சின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான உபாயமுறையிலான திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வழிப்படுத்தல்.
  - நேர்வரிசை அமைச்சு (கமத்தொழில் அமைச்சு) மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பை செய்தல்.
  - தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் கருத்திட்ட நடவடிக்கைகள் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய திட்டங்களைத் தயார் செய்தல்.
  - இராஜாங்க அமைச்சின் விசேட முன்னுரிமைகளுக்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்து பிரதேச மட்டத்தில் அமுல்படுத்தல்.

## 2.2.3 நிதி நடவடிக்கைகள்

2020 ஆம் ஆண்டின் மீண்டுவரும் நிதியத்தை செலவிடுவதானது 2020.01.01 ஆம் திகதி முதல் 2020.08.31 ஆம் திகதி வரையான முன்னேற்றம் மற்றும் 2021 இன் உத்தேச மீண்டுவரும் நிதியின் மொத்த மதிப்பீடு பின்வருமாறு.

### 2.2.3.1 மீண்டுவரும் நிதியம் - இராஜாங்க அமைச்சு

| செலவு விடயம் | விபரம் | 2020.08.31 ஆம் திகதிக்கு கிடைத்துள்ள ஏற்பாடு (ரூபா) | 2020.08.31 ஆம் திகதிக்கு செலவினம் (ரூபா) | * 2021 ஆம் ஆண்டுக்கான மொத்த மதிப்பீடு(ரூபா) |
|---|---|---|---|---|
| | **ஆளுக்குரிய சம்பளமும், வேதனமும்** | **38,696,953.80** | **39,959,936.59** | **74,420,000.00** |
| 1001 | சம்பளமும், வேதனமும் | 26,633,197.37 | 28,037,963.37 | **52,000,000.00** |
| 1002 | மேலதிக நேரமும், விடுமுறைநாள் கொடுப்பனவு | **1,604,596.46** | **1,587,563.84** | **4,220,000.00** |
| 1003 | வேறு கொடுப்பனவுகள் | 10,459,159.97 | 10,334,409.38 | **18,200,000.00** |
| | **பிரயாணச் செலவினம்** | **609,727.00** | **553,877.00** | 8,200,000.00 |
| 1101 | உள்நாடு | 609,727.00 | 553,877.00 | 3,200,000.00 |
| 1102 | வெளிநாடு | 0 | 0 | **5,0**00,000.00 |
| | **வழங்கல்** | **4,924,676.94** | **4,885,744.23** | **18,100,000.00** |
| 1201 | எழுதுகருவியும், அலுவலகத் தேவைகளும் | 1,691,554.62 | 1,534,080.62 | 4,250,000.00 |
| 1202 | எரிபொருள் | 2,776,011.82 | 2,919,828.11 | 11,500,000.00 |
| 1203 | உணவு, குடிபானம் மற்றும் சீருடை | 457,110.50 | 431,835.50 | 1,750,000.00 |
| 1205 | **ஏனையன** | **0** | **0** | **600,000.00** |
| | **பரமரிப்புச் செலவினம்** | **3,631,742.89** | **3,548,205.30** | **17,580,000.00** |
| 1301 | வாகனம் | 3,218,896.07 | 3,218,358.48 | 15,380,000.00 |
| 1302 | பொறியும், இயந்திரசாதனமும் | 339,596.82 | 256,596.82 | 1,200,000.00 |
| 1303 | கட்டிடங்களும், நிர்மாணிப்பும் | 73,250.00 | 73,250.00 | 1,000,000.00 |
| | **ஒப்பந்த சேவைகள்** | **10,318,093.95** | **9,688,861.84** | **24,550,000.00** |
| 1401 | போக்குவரத்து | 2,061,411.37 | 2,209,798.46 | 3,600,000.00 |
| 1402 | தபாலும், தொடர்பாடலும் | 1,269,882.40 | 1,189,803.25 | 4,200,000.00 |
| 1403 | நீரும், மின்சாரமும் | 3,105,921.00 | 2,969,296.50 | 7,000,000.00 |
| 1409 | ஏனையன | 3,880,879.18 | 3,319,963.63 | 9,750,000.00 |
| | **மாற்றல்கள்** | **585,647,44** | **491,336.37** | **1,000,000.00** |
| 1506 | அரச ஊழியர்களுக்கான சொத்துக் கடன் வட்டி | 585,647.44 | 491,336.37 | 1,000,000.00 |
| | **ஏனைய மீண்டுவரும் செலவினம்** | **40,000.00** | **0** | **200,000.00** |
| 1703 | அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தல் | 40,000.00 | 0 | 200,000.00 |
| | **மொத்தம்** | **58,806,842.02** | **59,127,961.33** | **144,050,000.00** |

* திறைசேரியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு

#### 2.2.3.2 மூலதன நிதியம்

2020 ஆம் ஆண்டின் மூலதன நிதியத்தை செலவிடுவதானது 2020.01.01 ஆம் திகதி முதல் 2020.08.31 ஆம் திகதி வரையான முன்னேற்றம் மற்றும் 2021 இன் உத்தேச மூலதன நிதியின் மொத்த மதிப்பீடு பின்வருமாறு.

| செலவு விடயம் | விபரம் | 2020.08.31 ஆம் திகதிக்கு கிடைத்துள்ள ஏற்பாடு (ரூபா) | 2020.08.31 ஆம் திகதிக்கு செலவினம் (ரூபா) | * 2021 ஆம் ஆண்டுக்கான மொத்த மதிப்பீடு (ரூபா) |
|---|---|---|---|---|
| | **மூலதன சொத்துப் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்கள்** | **1,503,651.11** | **1,467,507.81** | **8,750,000.00** |
| 2001 | கட்டிடங்கள் | 330,000.00 | 328,130.00 | 4,700,000.00 |
| 2002 | பொறியும், இயந்திரசாதனமும் | 40,000.00 | 6,800.00 | 450,000.00 |
| 2003 | வாகனம் | 1,133,651.11 | 1,132,577.81 | 3,600,000.00 |
| | **மூலதன சொத்துக்களை கொள்வனவு செய்தல்** | **1,878,217.50** | **1,828,177.50** | **5,000.000.00** |
| 2101 | வாகனம் | 0 | 0 | 0 |
| 2102 | தளபாடமும், அலுவலக உபகரணமும் | 1,503,870.00 | 1,483,850.00 | 3,000இ000.00 |
| 2103 | பொறியும், இயந்திரசாதனமும் | 374,347.50 | 344,327.50 | |
| | **திறன் விருத்தி** | **280,500.00** | **80,500.00** | **2,800,000.00** |
| 2401 | பயிற்றுவித்தலும், திறன் விருத்தியும் | 280,500.00 | 80,500.00 | 2,800இ000.00 |
| | **ஏனைய மூலதன செலவினம்** | **100,000.00** | **19,905.67** | **2,000,000.00** |
| 1-2-0-2509 | ஏனையன | 100இ000.00 | 19,905.67 | 2,000,000.00 |
| | **மொத்தம்** | 3,762,368.61 | 3,396,090.98 | 18,550,000.00 |
| | **மொத்தம்** | **62,569,210.63** | **62,524,052.31** | **162,600,000.00** |

* திறைசேரியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு

### 2.2.4 உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்

**2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

2021 ஆம் ஆண்டின் செயற்றிட்டத்திற்கு அமைய இராஜாங்க அமைச்சின் கணக்காய்வு பரிசோதனைகளை மேற்கொண்டு கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். இதற்கமைய பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படவுள்ளன.

i. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல்.

ii. விசேட கணக்காய்வு விசாரணைகளை மேற்கொள்ளல்.

iii. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தல்.

iv. ஆரம்ப மதிப்பீட்டு அறிக்கை மற்றும் காலாண்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

## 2.3 இராஜாங்க அமைச்சின் கீழ் எதிர்கால அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

1. விசேட பூகோள பண்களைக் கொண்டுள்ள பிரதேசங்களில் பயிரிடக்கூடிய மஞ்சல், உளுந்து, இஞ்சி, உள்நாட்டு கிழங்கு வகைகள் போன்ற சிறு பயிர்செய்கைகளை வீடுகளை அண்மித்த காணிகளில் பயிர் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

2. வீடுகளில் ஆடு, கோழிகளை வளர்ப்பதற்காக கால்நடைவள அபிவிருத்திக் கருத்திட்டச் சேவைகளை முறையாகப் பெற்றுக் கொடுத்தல்.

3. விசேடமாக விவசாய மற்றும் கால்நடைவளர்ப்பு நடவடிக்கைகளில் புதிதாக ஆட்களை ஈடுபடுத்துவதும், அதற்குத் தேவையான பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதும் மற்றும் புதிய தொழில்நுட்பத்துடன் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான அறிவைப் பெற்றுக் கொடுப்பதும்.

4. நிதி நிறுவனங்கள், தொழில்நுட்பச் சேவை நிறுவனங்கள், அடிப்படை உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்களை வழங்குவோரை இனங்கண்டு அதன் மூலம் சிறு பயிர்செய்கை சந்பந்தமான வீட்டு உற்பத்திகளை விஸ்தரிப்பதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதை ஒருங்கிணைப்புச் செய்தல்.

5. உரிய நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பின்தங்கிய கிராமங்களில் வாழ்வாதார வழிமுறைகள் மற்றும் அடிப்படைத் தேவைகளை வலுவூட்டுவதற்கான நுன் நிதி வசதிகள் உள்ளடங்கலாக புத்தெழுச்சிக்கான நிதி வசதிகள் முறையியலை அறிமுகம் செய்தல்.

6. பயங்கரவாத செயற்பாடுகளுக்கு ஆளான கிராமப்புற பிரதேசங்களின் வீதிகள், நீர்ப்பாசனம், குடிநீர் வசதிகள், மின்சாரம், மருந்தகங்கள், ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்காக வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார புத்தெழுச்சிக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியுடன் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

மேலே இலக்கம் 3 மற்றும் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள விசேட முன்னுரிமை அம்சங்களுக்காக இந்த அமைச்சுக்கு நேரடியாக நிதி ஏற்பாடுகள் வழங்கப்படுவதில்லை என்பதுடன் பயனாளிகளின் கோரிக்கைகளின் அடிப்படையில் நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடி உற்பத்திகளை விஸ்தரிப்பதற்கும், வாழ்வாதார அபிவிருத்தி நுண் நிதி வசதிகள் முறையியலை ஏற்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இலக்கம் 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பயங்கரவாத நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட் கிராமப் பிரதேசங்களில் வீதிகள், நீர்ப்பாசனம், குடிநீர் வசதிகள், மின்சாரம், மருத்துவ நிலையங்கள் மற்றும் ஆரம்ப பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை தேவைகளுக்கு அமையவும், கிடைக்கின்ற கோரிக்கைகளின் அடிப்படையிலும் ஜனாதிபதி செயலணியுடன் இணைந்து குறித்த ஏற்பாடுகளின் மூலம் நிறைவேற்றிக் கொடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை இராஜாங்க அமைச்சின் எதிர்கால அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்யும் போது புத்தாயிரமாம் ஆண்டின் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் “நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளக்கூடியவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இது 2025 இல் உத்தேசிக்கப்பட்டுள்ள முழுமையான பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் உறுதுணையாக அமையும்.

அதற்கமைய 2020 ஆம் ஆண்டின் அடுத்துவரும் காலப்பகுதி மற்றும் 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறாகும்.

➢ 2020 ஆம் ஆண்டின் அடுத்துவரும் காலப்பகுதியில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நஉஉத்உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்.

| **கருத்திட்டத்தின் பெயர்** | **ஒதுக்கம் செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ரூ.மி.** | **முன்னேற்றம்** |
|---|---|---|
| மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் பின்தங்கிய கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்து வதற்காக அமுல்படுத்தப்படும் ஆடு வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் | 25.00 | கருத்திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அங்கீகாரம் மற்றும் ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

➢ **2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்**

| | **உத்தேச நிகழ்ச்சித்திட்டம்** | **இலக்குக் குடும்பங்களின் எண்ணிக்கை** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.மி.** |
|---|---|---|---|
| 1. | **மஞ்சல், உளுந்து, இஞ்சி பயிர்செய்கை நிகழ்ச்சித்திட்டம்**<br>இறக்குமதி நிறுத்தப்பட்டதன் காரணமாக நாட்டில் பற்றாக்குறையாக உள்ள இந்தப் பயிர்செய்கைகளுக்கு உதவி வழங்கி தன்னிறைவடைந்த நிலைமையை ஏற்படுத்து வதும், அந்நியச் செலாவணியை சேமிப்பதும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும் | 60,000.00 | 1,600 |
| | **கிராமிய அடுவளர்ப்புத் நிகழ்ச்சித்திட்டம்**<br>பால், இறைச்சி, உரம், தோல் ஆகிய உற்பத்திகளை இலக்காகக் கொண்டு உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்தல், இறக்குமதியை நிறுத்தல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல், போசாக்குத் தேவைகளை பூர்த்தி செய்தல் | 34,000 | 1,700 |
| 3. | **வீடுகளில் கோழி வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம்**<br>முட்டை, இறைச்சி, உரம் உற்பத்தியை இலக்காகக் கொண்டு வீடுகளில் கோழி வளர்ப்பதன் மூலம் மக்களின் போசாக்கை மேம்படுத்தல், உற்பத்திகளை மேம்படுத்தல் மூலம் முட்டை விலைக் கட்டுப்பாடு மற்றும் மக்களின் வருமானத்தை மேம்படுத்தல் | 55,000 | 1,400 |

- இதற்கு மேலதிகமாக தற்போது காணப்படுகின்ற தரவுகளின் அடிப்படையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மலசலகூட வசதிகள் இல்லாத பெரும் திரளானோர் வாழ்ந்துவருவதுடன், இந்திய அரசின் உதவியின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமுல்படுத்தப்படுகின்ற மலசலகூடங்கள் 3400 ஐ நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை இந்த அமைச்சினூடாக 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.4 தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அதிகாரசபை

1972 இன் 11 ஆம் இலக்க கமத்தொழில் கூட்டிணைத்தல் சட்டத்தின் கீழ் 1978 கமத்தொழில் பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை (ஹதபிம அதிகாரசபை) மத்திய மலைநாட்டின் சுற்றாடல் சமநிலையைப் பாதுகாத்து அப்பிரதேசங்களில் வாழும் விவசாயிகளான மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன், தாபிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு முதல் இந்த நிகழ்ச்சித்திட்டங்களை நாடு முழுவதிலும் அமுல்படுத்த ஹதபிம அதிகாரசபைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் உரித்தாகியுள்ளது. நிறுவனத்தை ஆரம்பித்த போது பின்வரும் சட்டரீதியான தத்துவம் அதிகாரசபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டது.

- கமத்தொழில் பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் சம்பந்தப்பட்ட ஆற்றுப்பள்ளத்தாக்கு முகாமைத்துவம்.
- நிறுவனத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள காணிகளிலிருந்து உச்சளவான விளைச்சலைப் பெற்றுக் கொள்ளல்.
- சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நீர் வளத்தைப் பாதுகாத்தல்.
- விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளில் தலையீடு செய்தல்.
- குடியிருப்பு அபிவிருத்திக்குத் தேவையான பொறி, உபகரணங்களின் பராமரிப்பைத் தாபித்தல்.

1987 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான பணியாக இருப்பது மத்திய மலைநாட்டில் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் மண் பேணல் மற்றும் ஆற்றுப்பள்ளத்தாக்குகளை முகாமைத்துவம் செய்வதாகும். பிற்காலத்தில் இந்த அதிகாரசபை இலங்கையின் பசுமை பிரதேச அபிவிருத்தி மத்திய அதிகாரசபையாக மாறியதுடன் மேற்படி நோக்கங்களை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் அமுல்படுத்தி வந்துள்ளது. மேன்மைதங்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‘ அவர்களின் ‘‘நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு’’ எண்ணக்கருவுக்கு அமைய கமத்தொழிலில் புத்தெழுச்சிக்கு உயர்மட்ட முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய இலங்கை ஹதபிம அதிகாரசபையானது பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

### எதிர்கால இலக்குகள்

இலங்கை ஹதபிம அதிகாரசபையானது பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்படுகின்ற ஒரே அரச நிறுவனமாக உள்ளது. அதற்கமைய நிறுவனத்தின் ஆரம்ப நோக்கங்களுக்கு மேலதிகமாக புதிய இராஜாங்க அமைச்சின் விசேடமான முன்னுரிமைகளுக்கு அமைய அதிகாரசபையினால் பல்வேறு புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. யுத்த சூழல் காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேச மக்களின் சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, மேற்படி பிரதேசங்களில் பின்தங்கிய அபிவிருத்தியைக் கொண்ட கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் வீட்டு வருமான உருவாக்க நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி அவர்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியாக வலுவூட்டுவதற்கு சமுதாயத்தின் பங்கேட்புடன் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்கமைய அதிகாரசபையின் பௌதீக மற்றும் மனிதவளங்களை அபிவிருத்தி செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.இதன் கீழ் புதிய அமைச்சின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் எதிர்பார்க்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு அதிகாரசபை செயற்படும். அத்துடன், பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழிப்பதற்கான ஜனாதிபதி செயலணியுடன் ஒருங்கிணைப்புச் செய்வதற்கு வாய்ப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ளமை மக்களுக்காக மென்மேலும் சிறந்த சேவையை விவசாய சமுதாயத்திற்குப் பெற்றுக் கொடுப்பதற்கும், அச்சேவைகளை நிலைபேறான முறையில் பேணிவருவதற்கும் இந்த அதிகாரசபைக்கு இயலுமாகும்.

இந்த அதிகாரசபையின் 2020 செப்தெம்பர் மாதம் வரையான முன்னேற்றம் மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான உத்தேச எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு.

## ➢ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் - 2020 செப்டம்பர் மாதம் வரை

| தொ இல. | கருத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் | செயற்பாடு | | ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி. | முன்னேற்றம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செலவினம் ரூபா | % | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றம் ஒட்டுமொத்த பயனாளிகள் மற்றும் பால்நிலை அடிப்படையிலான பங்கேட்பு தனித்தனியாக காட்டப்படல் வேண்டும் | | % | வேறு |
| | | | | | | | | | பெண் | ஆண் | | |
| 1 | தரவு முறைமையை தயார் செய்தல் | 1.1 | ஒரு நிறுவனத்தை இனங்காணல் | 0.50 | 0 | | 1 | | | | | |
| | | 1.2 | தரவுப் பகுப்பாய்வு | 2.50 | 0 | | | | | | | |
| 2 | விவசாய பயிற்சி | 2.1 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் | 1.01 | 236,035.00 | 23 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 135 | பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் 93 | 6975 | 2325 | 68 | |
| 3 | ஊடக மற்றும் பிரச்சார மேம்படுத்தல் | 3.1 | இலத்திரனியல், அச்சு ஊடக நிகழ்ச்சித் திட்டம் | 1.50 | 0 | | நிகழ்ச்சித்திட்டம் 10 | | | | | |
| 4 | மண் பகுப்பாய்வு | 4.1 | மணல் பகுப்பாய்வு மற்றும் உபகரணம் கொள்வனவு | 5.50 | 0 | | - | | | | | |
| | | 4.2 | தொழில் நுட்ப ஆலோசனை பெறல் | 0.50 | 0 | | - | | | | | |
| 5 | நிறுவனங்களுக்கு இடையிலான தொழில் நுட்பப் பயிற்சி | 5.1 | வெளிக்கள சுற்றுலா மற்றும் செயன் முறைப் பயிற்சி | 0.50 | 0 | | நிகழ்ச்சித்திட்டம் 10 | | | | | |
| 6 | தொழில் நுட்பக் குழுக்களைத் தாபித்தல் | 6.1 | விடயரீதியான கல்விமான்கள் குழுவை தாபித்தல் | 1.00 | 0 | | - | | | | | |
| 7 | மணல் பாதுகாப்புக் கட்டமைப்புக்களை தாபித்தல் | 7.1 | காணிகளை இனங்காணல் | 0.50 | 0 | | 2500(ஹெக்) | | | | | |
| | | 7.2 | மணல் பாதுகாப்புக் கட்டமைப்புக்களை தாபித்தல் | 25.00 | 0 | | 2500(ஹெக்) | 346.02(ஹெக்) | 641 | 213 | 14 | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | மணல் மீளமைத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் | 8.1 | சேதன பசளை உற்பத்தி மற்றும் உபயோகத்தை பிரபல்யப்படுத்தல் | 17.50 | 0 | | மெ.தொ. 5000 | மெ.தொ. 1904 | 1428 | 476 | 38.8 | |
| 9 | பயிர் செய்கை பல்வகைப்படுத்தல் | 9.1 | நடுத்தர கால, குறுங்கால, நிரந்தர பயிர்ச்செய்கை | 5.00 | 0 | | பயிர் செய்கை அலகு 5000 | | | | | |
| | | 9.2 | மேலதிக உணவுப் பயிர்செய்கை | 23.50 | 385,780.00 | 19 | 1700(ஹெக்) | 227.6(ஹெக்) | 422 | 140 | 13.38 | |
| 10 | நீர் மூலங்களைப் பாதுகாத்தல் | 10 | நீர் மூலங்களைப் பாதுகாப்பதற்கான சமுதாய அமைப்புக்களை தாபித்தல் (நில்தியவர) | 0.50 | 0 | | நிகழ்ச்சித்தி ட்டம் 100 | | | | | |
| | | 10 | நீர் மூலங்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் | 20.00 | 0 | | நீர் மூலம் 100 | | | | | |
| 11 | விவசாய பயிற்சி நிலையத்தை மேம்படுத்தல் | 11 | கொத்மலை பண்ணையின் விவசாய பயிற்சி நிலையத்தை மேம்படுத்தல் | 14.21 | 0 | | - | | | | | |
| 12 | இணைந்த பண்ணை மேம்படுத்தல் | 12 | கொத்மலை பண்ணையை அபிவிருத்தி செய்தல் | 1.00 | 0 | | - | | | | | |
| | | 12 | பல்லேகெலே பண்ணையை அபிவிருத்தி செய்தல் | 8.75 | 0 | | - | | | | | |
| 13 | விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதை அபிவிருத்தி செய்தல் | 13 | விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதை அபிவிருத்தி செய்தல் மற்றும் பெறுமதியை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் | 0.64 | 0 | | - | | | | | |
| 14 | விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்தல் மற்றும் பெறுமதியை அதிகரிப்பதற்கான கிராமிய தொழில்முயற்சி அபிவிருத்தி | 14 | அழகிய செடிகளின் பயிர்செய்கை நிகழ்ச்சித்திட்டம் | 7.50 | 0 | | - | | | | | |
| 15 | நிறுவன அபிவிருத்தி | 15 | நிறுவன மற்றும் பௌதீக மனிதவள அபிவிருத்தி | 12.89 | 742,143.30 | | - | | | | | |
| **மொத்தம்** | | | | **150.00** | **1,363,958.30** | | | | **9,466.00** | **3154.00** | | |

| தொ. இல. | கருத்திட்டம் | செயற்பாடு | | அலகு | இலக்கு | இலக்குப் பெறுமதி ரூ. | மொத்தப் பெறுமதி ரூ.மி. | விபரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மண் பாதுகாப்பு மற்றும் நீர் முகாமைத்துவம் | 1.1 | மண் பாதுகாப்பு கட்டமைப்பை தாபித்தல் | ஹெக்ரயார் | 7,000 | 35,000 | 245.00 | மண்சரிவு நிலைமையை குறைப்பதற்காக மண் பேணல் கட்டமைப்புக்களை அமைப்பதற்காக ஒரு ஹெக்ரயாருக்கு ரூபா 35,000.00 ஆன கொடுப்பனவைச் செலுத்தல் |
| | | 1.2 | மண் பாதுகாப்பு தொழில்நுட்பப் பயிற்சி | விவசாயிகள் | 17,500 | 200 | 3.50 | இனங்காணப்பட்ட விவசாயிகளுக்கு மண் பேணல் பற்றிய கோட்பாடுசார் மற்றும் செயன்முறைப் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல் |
| 2 | நிலைபேறான வீட்டுத் தோட்ட முகாமைத்துவம் | 2.1 | வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | வீட்டுத் தோட்டம் | 35,000 | 5,000 | 175.00 | வீட்டுத் தோட்ட பயிர்செய்கைக்கு விவசாயிகளை ஊக்குவிப்பதற்கான தொழில்நுட்பம் மற்றும் விவசாய அம்சங்களை பெற்றுக் கொடுத்து 35,000 வீட்டுத் தோட்ட அலகுகளை அபிவிருத்தி செய்தல் |
| | | 2.2 | வீட்டுத் தோட்ட அபிவிருத்திக்கு தொழில்நுட்ப பயிற்சி | விவசாயிகள் | 35,000 | 200 | 7.00 | இனங்காணப்பட்ட விவசாயிகளுக்கு வீட்டுத் தோட்ட அபிவிருத்தி பற்றிய கோட்பாடுசார் மற்றும் செயன்முறை பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல் |
| 3 | சுற்றாடலுக்கு சாதகமான சேதனப் பசளை உற்பத்தி | 3.1 | சேதனப் பசளை உற்பத்தி | மெ.தொ. | 35,000 | 3,000 | 105.00 | விசம் அற்ற சேதனப் பசளை மூலமான விவசாயத்திற்கு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு தொழில்நுட்பம் மற்றும் விவசாய அம்சங்களைப் பெற்றுக் கொடுத்தல் |
| | | 3.2 | சேதனப் பசளை உற்பத்திக்கான தொழில்நுட்பப் பயிற்சி | விவசாயிகள் | 35,000 | 200 | 7.00 | இனங்காணப்பட்ட விவசாயிகளுக்கு சேதனப் பசளை உற்பத்தி பற்றிய கோட்பாடுசார் மற்றும் செயன்முறை பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல் |
| 4 | நில்தியவர சமுதாய நீர்க் கருத்திட்டம் | 4.1 | நீர் மூலங்களைப் பேணல் | நீர் மூலம் | 350 | 300,000 | 105.00 | மண் பேணல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இனங்காணப்படுகினற் பிரதேச செயலாளர் பிரிவுகள் 70 இல் பிரதேச நீர் மூலங்கள் 05 என்ற வகையில் 150 நீர்மூலங்களை பேணல் |
| 5 | கிராமிய சமுதாய போசாக்கு கருத்திட்டம் | 5.1 | விலங்கு இனப்பெருக்க நிலையத்தை மேம்படுத்தல் | கோழிக் குஞ்சுகள் | 35,000 | 375 | 131.25 | பல்லெகெலே பண்ணையில் கோழிக் குஞ்சு இனப்பெருக்க நிலையத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் குஞ்சு உற்பத்தி |
| 6 | விதை மற்றும் பயிர் பதார்த்த உற்பத்தி | 6.1 | கொத்மலை பண்ணையை நவீனமயப்படுத்தல் | நிலையம் | 1 | 5,000,000 | 5.00 | கொத்மலை பண்ணையில் பயிர்செய்கை பொருள் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக குறித்த அலகை நவீனமயப்படுத்தல் மற்றும் செடி உற்பத்தி |
| 7 | கலப்பின விதை உற்பத்தி | 7.1 | பல்லேகெலே பண்ணையை நவீனமயப்படுத்தல் | நிலையம் | 2 | 2,500,000 | 5.00 | விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் பேரில் பல்லேகெலே பண்ணையில் கலப்பின மிளகாய் விதை உற்பத்தி அலகை ஆரம்பித்தல் |
| **மொத்தம்** | | | | | | | **788.75** | |

➢ **அமைச்சின் கீழ் காணப்படுகின்ற இலங்கை ஹதபிம அதிகாரசபையின் எதிர்கால அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

| தொ. இல. | கருத்திட்டம் | செயற்பாடு | | அலகு | இலக்கு | பெறுமதி மி ரூ. | பெறுமதி ரூ.மி. | விபரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சிறிய காணி அபிவிருத்தி | 1.1 | சேதன பசளை உற்பத்தி | மெ.தொ. | 100000 | 5,000 | 500 | விசம் அற்ற சேதனப் பசளை உற்பத்திக்கு விவசாயிகளை வழிப்படுத்தல். |
| | | 1.2 | வீட்டுப் பயிர்செய்கை நிகழ்ச்சித்திட்டம் | சிறிய காணி அலகுகள் | 100000 | 5,000 | 500 | சிறிய காணிகளின் உற்பத்தியின் விளைச்சாலை மேம்படுத்துவதற்காக பயிர்செய்கைகளை அறிமுகம் செய்தல் |
| 2 | வீட்டு கால்நடைவள பாதுகாப்பு | 2.1 | ஆடு வளர்ப்பை பிரபல்யப்படுத்தல் | ஆடு வளர்ப்பு அலகு | 25000 | 250,000 | 625 | வீட்டு ஆடு வளர்ப்பை விஸ்தரித்தல் |
| | | 2.2 | பசு வளர்ப்பு | வளர்ப்பு அலகு | 1000 | 200,000 | 200 | சிறிய அளவிலான பசு வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களை விஸ்தரித்தல் |
| | | 2.3 | பகுதியளவில் வீட்டுக் கோழி வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் | அலகு | 25000 | 5,000 | 125 | பகுதியளவில் வீட்டுக் கோழி வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தை பிரபல்யப்படுத்தல் |
| 3 | வீட்டு வருமான உருவாக்க கருத்திட்டங்கள் | 3.1 | காலாண் பயிர்செய்கைக் கருத்திட்டம் | பயிர்செய்கை அலகு | 500 | 50,000 | 25 | வருமான உருவாக்க நிகழ்ச்சித்திட்டங்களாக காலாண் உற்பத்தியை பிரபல்யப்படுத்தல் |
| | | 3.2 | அழகிய மீன் உற்பத்தி | பயிர்செய்கை அலகு | 500 | 50,000 | 25 | அழகிய மீன் உற்பத்திக்குத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல் |
| | | 3.3 | அழகிய செடிகளை பயிரிடல் | பயிர்செய்கை அலகு | 500 | 50,000 | 25 | வருமான உருவாக்க நிகழ்ச்சித்திட்டங்களாக அழகிய செடி பயிர்செய்கையை அறிமுகம் செய்தல் |
| | | 3.4 | இலகு கைத்தொழிலை மேம்படுத்தல் | கைத்தொழில ாளர்கள் | 500 | 50,000 | 25 | கிராமிய இலகு கைத்தொழில் மேம்பாடு |
| 4 | செயற்பாட்டு, முகாமைத்துவ செலவினம் | | | | | | 5 | செயற்பாட்டு முகாமைத்துவ செலவினம் |
| 5 | நிருவாக செலவினம் | | | | | | 60 | நிருவாக செலவினம் |
| **மொத்தம்** | | | | | | | **2115.** | |

## 2.5 நிறுவனக் கட்டமைப்பு

